ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2401/23 - 2024 සැප්තැම්බර් මස 12 වැනි බ්‍රහස්පතින්දා - 2024.09.12

*2401/23 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 12 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

### சனாதிபதியின் பிரகடனம்

(முத்திரை)

**ரணில் விக்ரமசிங்ஹ**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி, ரணில் விக்ரமசிங்ஹ ஆகிய நான், 1915 ஆம் ஆண்டு யூன் மாதம் 25 ஆந் திகதி இலங்கை ஆளுநராக இருந்த றொபர்ட் சால்மர்ஸ் அவர்களினால் வெளியிடப்பட்ட பிரகடனத்தால் நியமிக்கப்பட்ட இராணுவ நீதிமன்றத்தினால் நியாயமற்ற முறையில் விசாரிக்கப்பட்டதன் பிற்பாடு 1915, யூலை மாதம் 07 ஆந் திகதி சட்டவிரோதமாக மரணத்தண்டனை நிறைவேற்றப்பட்ட திரு. டியுனுகே எட்வர்ட் ஹென்றி பேதிரிஸ் அவர்களுக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 34 ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 33(ஏ) ஆம் உறுப்புரையின் கீழ் எனக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், மரணத்திற்குப் பின்னரான சனாதிபதி மன்னிப்பொன்றை இத்தால் வழங்குகின்றேன்.

இரண்டாயிரத்து இருபத்து நான்காம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 12 ஆந் திகதி கொழும்பில் வழங்கப்பட்டது.

**ரணில் விக்ரமசிங்ஹ,**
சனாதிபதி.

*2024, செத்தெம்பர் 12.*

EOG *09-0100*

1A - G 42691 — 355 (2024/09) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*